## எத்தனை சூழ்ச்சிகள் வந்தாலும், 2026 தேர்தலில் மீண்டும்

# உதயசூரியன் உதிப்பதை யாராலும் தடுக்க முடியாது!

### திருச்சியில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில்

### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சி உரை!




**திருச்சி,அக்.10 –**

**திருச்சி, கலைஞர் அறிவாலயத்தில், கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் திருவரங்கம் சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த கழக நிர்வாகிகளுடனான கலந்துரையாடல் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டு எழுச்சிமிக்க உரை யாற்றினார்.**

**அப்போது அவர், ``எத்தனை சூழ்ச்சிகள் வந்தாலும், 2026 தேர்தலில் மீண்டும் உதயசூரியன் உதிப்பதை யாராலும் தடுக்க முடியாது என்று குறிப்பிட்டார்.**

**கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:**

திருச்சி மத்திய மாவட்டத்துக்கு வருகை தந்து, திருவரங்கம் சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த கழக நிர்வாகிகள், பூத் கமிட்டி நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், உங்கள் அத்தனை பேரையும் தனித்தனியாகப் பலமுறை நேரடியாகச் சந்தித்திருக்கிறேன். இன்று அனைவரையும் ஒரே இடத்தில், நம் கலைஞர் அரங்கத்தில் சந்திப்பதில், உண்மையிலேயே மிகுந்த பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன்.

**கழகத்தின் திருப்புமுனை**

திருச்சி மாவட்டத்துக்கு எப்போது வந்தாலும் ஒரு தனி உற்சாகமும் தெம்பும் தானாக வந்துவிடும். அது, திருச்சிக்கான சிறப்பு. திருச்சி என்று சொன்னால், நம் அனைவருக்கும் ஞாபகம் வருவது கழகத்தின் திருப்புமுனை என்றால், அது திருச்சிதான். தமிழ்நாட்டின் வரைபடத்தில் மட்டும் மத்தியில் இருப்பது திருச்சி கிடையாது. தமிழ்நாட்டு அரசியலிலும் மத்தியில் இருப்பது திருச்சிதான். திருச்சி என்று சொன்னால், `தீரர் கோட்டை' என்று சொல்வார்கள். இன்று நம் கழகம் 75 ஆண்டுகளைக் கடந்து, பவளவிழாவைக் கொண்டாடிவிட்டு, 76-வது ஆண்டில் நாம் அடியெடுத்து வைத்திருக்கிறோம். பவளவிழா நேரத்தில் நாம் அனைவரும் ஒன்றாகச் சந்திக்கிறோம்.

**கலைஞரின் உடன்பிறப்புகள்**

இந்த 75 வருடங்களாக எத்தனையோ அவதூறுகளையும் பொய் குற்றச்சாட்டுகளையும், வதந்திகளையும், பிரச்சாரங்களைச் செய்துபார்த்தும், இன்றைக்கும் தி.மு.க-வை எதிரிகளால் தொட்டுக்கூட பார்க்க முடியவில்லை என்றால், அதற்கு இங்கு வந்திருக்கின்ற கலைஞரின் உடன்பிறப்புகளாகிய நீங்கள்தான் காரணம். 75 வருடங்கள் ஆகியும் இன்றைக்கும் அதே இளமையோடும் அதே துடிப்போடும், அதே வேகத்தோடும் உறுதியோடும், வலிமையோடும் இருக்கிறது என்றால், அதற்கும் காரணம், வந்திருக்கின்ற உடன்பிறப்புகள் நீங்கள்தான்.

தி.மு.க என்ற மிகப்பெரிய கோட்டைக்கு அடித்தளமாக இருந்து, அந்தக் கோட்டைக்கு எந்தச் சேதாரமும் வராமல், அதைக் காத்துநிற்பது உடன்பிறப்புகளாகிய நீங்கள்தான். நீங்கள் இல்லாமல் நம் திராவிட முன்னேற்றக் கழகம் கிடையாது. நீங்கள் இல்லாமல் கலைஞர், நம் தலைவர், இப்போது இருக்கின்ற திராவிட மாடல் அரசும் கிடையாது.

கலைஞருக்கும் ஒரு பெருமை உண்டு. எந்த அரசியல் தலைவருக்கும் இல்லாத பெருமை, அவருக்கு உண்டு என்று நாம் பெருமையாகச் சொல்வோம். அவர் நின்ற தேர்தலில் எல்லாம் வென்ற ஒரே தலைவர், நம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். நம் இயக்கம்கூட சில வெற்றி வாய்ப்புகளை இழந்திருக்கிறது. அந்த நேரத்திலும் வெற்றிபெற்ற ஒரே தலைவர், தன் அரசியல் வாழ்வில் தோல்வியே சந்திக்காத ஒரே தலைவர், நம் தலைவர் கலைஞர் அவர்கள்தான். அதேபோல், நம் கழகத் தலைவர் அவர்களுக்கு ஒரு பெருமை உண்டு. நம் தலைவர் அவர்கள் கழகத்தின் தலைவராகப் பொறுப்பேற்று, கழகம் சந்தித்த அனைத்துத் தேர்தல்களிலும் வெற்றிபெற்ற ஒரே தலைவர், நம் கழகத் தலைவர் அவர்கள்தான். அதற்கு மிகமிக முக்கிய காரணம். 50 சதவிகிதம் நம் தலைவரின் உழைப்பு என்றால், மீதியுள்ள 50 சதவிகிதம், இங்கு வந்துள்ள உங்களின் உழைப்பும்தான் அந்த வெற்றிக்குக் காரணம்.

**திராவிட மாடல் அரசு**

குறிப்பாக, 2021-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில், உங்களின் கடின உழைப்பால்தான் நம் திராவிட மாடல் அரசு அமைந்தது என்று பெருமையாக நாம் சொல்லலாம். திராவிட மாடல் அரசு அமைந்த இந்த நான்கரை வருடங்களில், இந்தியாவே திரும்பிப் பார்க்கிற அளவிற்கு சிறப்பான ஆட்சியை, ஏராளமான திட்டங்களை நம் தலைவர் அவர்கள் தமிழ்நாட்டு மக்களுக்காகக் கொடுத்திருக்கிறார். சிலவற்றை மட்டும் இங்கு உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

ஆட்சிக்கு வந்தவுடன் நம் தலைவர் அவர்கள், முதல் நாள் ஐந்து கையெழுத்துகளைப் போட்டார். அதில் முதல் கையெழுத்து, மகளிருக்குக் கட்டமில்லா விடியல் பயணத் திற்கான கையெழுத்துதான். இந்தத் திட்டத்தில், இந்த நான்கரை வருடத்தில் 800 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டுள்ளார்கள். ஒவ்வொரு மகளிரும் மாதந்தோறும் 900 ரூபாயிலிருந்து 1,000 ரூபாய் வரை சேமிக்கிறார்கள். இந்த திருச்சி மாவட்டத்தில் மட்டும் 40 கோடிக்கும் அதிகமான பயணங்களை, இந்த மகளிர் விடியல் திட்டத்தின் மூலம் மகளிர் மேற்கொண்டுள்ளார்கள்.

**கல்வியில் சிறந்த தமிழ்நாடு**

அரசுப் பள்ளியில் படித்த மாணவ, மாணவிகள் உயர் கல்வி படிக்க வைக்க வேண்டும் என்று நம் தலைவர் அவர்கள் கொண்டுவந்த திட்டம்தான், புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம். இந்த திட்டத்தின் மூலம் 8 லட்சம் மாணவ, மாணவிகளுக்கு ஊக்கத்தொகையாக மாதம் ஆயிரம் ரூபாயை நம் முதலமைச்சர் அவர்கள் வழங்கி வருகிறார். இந்த திருச்சி மாவட்டத்தில் மட்டும் 14 ஆயிரம் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டுக்கான உதவித்தொகை வழங்கும் `கல்வியில் சிறந்த தமிழ்நாடு' நிகழ்ச்சி, கிட்டத்தட்ட 25 நாட்களுக்கு முன்பு, சென்னையில், மிகுந்த உற்சாகத்தோடு, மாணவர்களின் பங்களிப்போடு நடந்தது. அந்த நிகழ்ச்சியில், தெலங்கானாவின் முதலமைச்சர் ரேவந்த் ரெட்டி அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். அப்போது `தமிழ்ப்புதல்வன், புதுமைப்பெண்' என்ற இரண்டு திட்டங்களையும் தெலங்கானாவில் அடுத்த ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப் போகிறேன், என்று பெருமையாகச் சொன்னார்.

முதலமைச்சர் காலை உணவுத் திட்டம். ஒருநாள், முதலமைச்சர் அவர்கள், ஆய்வுக்காக ஒரு பள்ளிக்குச் சென்றார். அங்கு ஒரு குழந்தை மிகவும் சோர்வாக உட்கார்ந்து இருந்தது. அந்தக் குழந்தையை அழைத்துப் பேசினார். `என்னப்பா ஏன் சோர்வாக இருக்கிறாய்?' என்று கேட்டார். அந்தக் குழந்தை `ஐயா காலையிலிருந்து சாப்பிடவில்லை. பசியோடு இருக்கிறேன்' என்று சொன்னது. அன்றைக்கு, தலைவர் இந்தத் திட்டத்தை செயல்படுத்தினார். இனிமேல் ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்புவரை படிக்கின்ற குழந்தைகள் பள்ளிக்கூடத்துக்கு வந்தால், முதலில் தரமான காலை உணவு, அதன்பிறகு, தரமான கல்வி வழங்கப்படும் என்று அறிவித்தார். 18 லட்சம் மாணவர்கள் ஒவ்வொரு நாளும் முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தின் மூலம் பயன்பெறுகிறார்கள். இரண்டு மாதங்களுக்கு முன்பு அந்தத் திட்டத்தை அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தினார். இந்த திருச்சி மாவட்டத்தில் மட்டும் 78 ஆயிரம் குழந்தைகள் இந்த திட்டத்தின் மூலம் பயன்பெற்று வருகிறார்கள்.

**பஞ்சாப் மாநில முதல்வர்**

இந்த திட்டத்தை விரிவுபடுத்தும் நிகழ்ச்சிக்கு வந்த பஞ்சாப் மாநிலத்தின் முதலமைச்சர் பகவான் சிங் அவர்கள் சென்னைக்கு வந்து, அந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டார். அப்போது, இந்தத் திட்டத்தின் சிறப்பைப் பார்த்து, இந்தத் திட்டத்தை என் மாநிலத்திலும் அறிமுகப்படுத்தப்போகிறேன் என்று சொன்னார்.

எல்லாரும் கேட்கிறார்களே, திராவிட மாடல் ஆட்சி என்று பெருமையாகச் சொல்கிறீர்களே திராவிட மாடல் ஆட்சி என்றால் என்னவென்று, இதுதான் திராவிட மாடல் ஆட்சி. மற்ற மாநிலங்களுக்கும், மற்ற முதலமைச்சர்களுக்கும் எடுத்துக்காட்டாக இருப்பதுதான், நம் முதலமைச்சரும், நம் திராவிட மாடல் அரசும்.

கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டம். நாம் ஆட்சிக்கு வரும்போது, கடும் நிதி நெருக்கடி இருந்தது. கிட்டத்தட்ட 6 மாத காலம் நாம் கொரோனா பெருந்தொற்றுடன் போராடிக்கொண்டு இருந்தோம். எதிர்க்கட்சிகள் எல்லாம் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தவே முடியாது என்று சொன்னார்கள். ஆனால், நம் தலைவர் அவர்கள், இரண்டு வருடங்களுக்கு முன்பு 2023- ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளில் இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். கிட்டத்தட்ட 1 கோடியே 20 லட்சம் மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய், நம் தலைவர் அவர்கள் கொடுத்துள்ளார்கள். 25 மாதங்கள் இந்த ஆயிரம் ரூபாயை நம் தலைவர் அவர்கள் வழங்கியுள்ளார்.

சில இடங்களில் இந்த கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வரவில்லை என்று சில குறைகள் இருக்கின்றன. அதை நாங்கள் முதலமைச்சரிடன் சொன்னோம். உடனே தலைவர் அவர்கள், உங்களுடன் ஸ்டாலின் என்ற முகாம்களை நடத்தச் சொன்னார். அந்த முகாம்களில் 60 சதவிகித கோரிக்கை மகளிர் உரிமைத்தொகை வேண்டும் என்ற கோரிக்கைதான். அந்தக் கோரிக்கை மனுக்கள் இப்போது வாங்கப்பட்டு, பரிசீலனையில் இருக்கின்றன. நிச்சயம் தலைவர் அவர்கள் அதில் சில தளர்வுகளைக் கொடுத்துள்ளார். இன்னும் இரண்டு மாதங்களில் இன்னும் கூடுதலான மகளிருக்கு கலைஞர் மகளிர் உரிமைத்தொகையை நிச்சயமாக நம் தலைவர் அவர்கள் வழங்குவார்கள்.

**திருவரங்கம் தொகுதி**

இந்த திருவரங்கம் தொகுதிக்குப் பல்வேறு திட்டங்களை நம் அரசு செய்திருக்கிறது. அதையும் இந்த நேரத்தில் நினைவுப்படுத்த விரும்புகிறேன். திருவரங்கத்தில் 11 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பேருந்து நிலையம் அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டு, கிட்டத்தட்ட 90 சதவிகித வேலைகள் முடிவடைந்துவிட்டன. விரைவில், அது திறந்துவைக்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டுக்கு வரும்.

திருச்சி, காவேரி பாலத்தில் 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில், மராமத்துப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் காவேரி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**இந்தியாவிலேயே நம்பர் ஒன்**

மணப்பாறை மாவட்டத் தலைமை மருத்துவனையில் ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில் அவசர சிகிச்சை பிரிவுக்காக புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. கண்ணுடையான்பட்டி, சமுத்திரன் இடையே மாமுண்டி ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் கட்டுவதற்கான முதற்கட்டப் பணிகள் தொடங்கி, வேகமாக நடைபெற்று வருகின்றன.

பெரியப்பட்டி பகுதியில் அரியாற்றின் குறுக்கே ஒரு உயர் மட்ட பாலம், தொகுதி முழுவதும் 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய பள்ளிக் கட்டடங்கள், அரசு கலைக் கல்லூரிக்கு 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய வகுப்பறைகள், திருச்சி தேசிய சட்டப் பல்கலைக்கழகத்துக்கு 18 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விடுதி, நமது அரசால் கட்டப்பட்டு வருகிறது.

இப்படி நம் முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு தொகுதியாக பார்த்துப் பார்த்து செய்துகொண்டு இருக்கிறார். அதனால், இன்றைக்கு இந்தியாவிலேயே நம்பர் ஒன் முதலமைச்சராக நம் முதலமைச்சர் இருக்கிறார். பொருளாதார வளர்ச்சியில் 11 சதவிகித வளர்ச்சியடைந்து, இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக நம் தமிழ்நாடு திகழ்ந்து கொண்டு இருக்கிறது.

தமிழ்நாட்டின் இந்த வளச்சியைப் பிடிக்காமல்தான் ஒன்றிய பாசிச பா.ஜ.க அரசு, இங்கு இருக்கின்ற அடிமைகளுடன் சேர்ந்து பிரச்சினைகள் மற்றும் சூழ்ச்சிகளைச் செய்கிறார்கள். அந்தத் தடைகளை எல்லாம் உடைத்து, நம் முதலமைச்சர் அவர்கள், ஒரு சிறப்பான ஆட்சியை நம் தமிழ்நாட்டு மக்களுக்காகக் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள்.

**மாநில உரிமையும் பறிப்பு**

நிதி உரிமை, கல்வி உரிமை, மொழி உரிமை, மாநில உரிமையைப் பறிக்கின்ற வேலைகளில் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசு தொடர்ந்து செய்துகொண்டு இருக்கிறது. தொகுதி மறுவரையறையைக் கொண்டுவந்து, 39 நாடாளுமன்றத் தொகுதிகளைக் குறைத்து, 32 தொகுதியாகக் குறைக்க முயற்சி செய்கிறார்கள். இதையெல்லாம் எதிர்த்து குரல் கொடுக்கின்ற இந்தியாவிலேயே ஒரே தலைவராக நம் தலைவர் அவர்கள் இருக்கிறார்கள்.

ஒன்றிய அரசு, புதிய கல்விக்கொள்கையைக் கொண்டுவந்து, இதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொன்னது. புதிய கல்விக்கொள்கையின் மூலமாக இந்தியையும், சமஸ்கிருதத்தையும் குறுக்கு வழியில் தமிழ்நாட்டுக்குள் நுழைக்கப் பார்த்தார்கள். குலக்கல்வித் திட்டத்தைக் கொண்டுவரப் பார்த்தார்கள்.

**பல அணிகள் இருக்கின்றன**

நீங்கள் புதிய கல்விக்கொள்கையை ஏற்றுக்கொண்டால்தான் தமிழநாட்டு பள்ளிக் கல்வித்துறைக்கு வரவேண்டிய 2,500 கோடி ரூபாயைத் தருவேன் என்று ஒன்றிய அமைச்சர் நேரடியாகச் சொன்னார். ஆனால், நம் முதலமைச்சர் அவர்கள், `நீங்கள் 2,500 கோடி ரூபாய் இல்லை, 10,000 ஆயிரம் கோடி ரூபாய் கொடுத்தாலும் தமிழ்நாட்டுக்குள் என்றைக்கும் இந்தியையும், சமஸ்கிருதத்தையும் திணிக்கவிட மாட்டேன். குலக்கல்வித் திட்டத்தை தமிழ்நாட்டுக்குள் அனுமதிக்க மாட்டேன்' என்று நம் தலைவர் அவர் சட்டப் போராட்டத்தை நடத்தினார். அந்த சட்டப் போராட்டத்தால் நம் கல்வி உரிமையை வென்று, ஒன்றிய அரசு தமிழ்நாட்டுக்குத் தரவேண்டிய நிதியை இன்று கொடுத்துள்ளது. இது நம் தலைவருக்குக் கிடைத்த வெற்றி.

நம் கழகத்தில் 25 அணிகள் இருக்கின்றன. இளைஞர் அணி, மாணவர் அணி, வழக்கறிஞர் அணி, மகளிர் அணி, தொண்டர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி என்று 25 அணிகள் இருக்கின்றன. ஆனால், அவற்றைவிட அதிகமாக அணிகள் அ.தி.மு.க-வில் இருக்கின்றன. ஈ.பி.எஸ். அணி, ஓ.பி.எஸ். அணி, டி.டி.வி அணி, சசிகலா அணி, செங்கோட்டையன் அணி, தீபா அணி, தீபா டிரைவர் அணி என்று பல அணிகள் இருக்கின்றன. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அணி உருவாகிறது. இந்த திருச்சியில் வெள்ளமண்டி நடராஜன் அணி, பரஞ்ஜோதி அணி, வளர்மதி அணி என்று இங்கு மூன்று அணிகள் தனியாக இயங்கிகொண்டு இருக்கின்றன.

பா.ஜ.க. வுடன் இனி எந்தக் காலத்திலும் கூட்டணி கிடையாது என்று நான்கு மாதத்துக்கு முன்பு சொன்னார் எடப்பாடி பழனிசாமி அவர்கள். இன்று அதே எடப்பாடி பழனிசாமி, `எப்போதும் பா.ஜ.க.வுக்கு நன்றிக் கடனுடன் இருப்பேன்' என்று, அதே வாய் இன்று சொல்கிறது. நன்றியைக் காட்டுவதற்கு நான்கு கார்கள் மாறி மாறிச் செல்கிற ஒரே நபர் நம் எடப்பாடி பழனிசாமி அவர்கள்தான். காரை மாற்றுவதும், கால்களை மாற்றுவதும் அவருக்கு புதிது கிடையாது. இன்று நிரந்தரமாக மோடியின் கால்களில் சரணடைந்துள்ளார், எடப்பாடி பழனிசாமி அவர்கள். இன்று தமிழ்நாட்டு மக்கள் அவரை எடப்பாடி பழனிசாமி என்று அழைப்பது கிடையாது. செல்லமாக, `முகமூடி பழனிசாமி' என்றுதான் அழைக்கிறார்கள். ஏனென்றால், டெல்லிக்கு அவர் செல்லும்போது சிரித்துக்கொண்டே சென்றார். உள்ளே என்ன நடந்தது என்று யாருக்கும் தெரியவில்லை. வெளியே வரும்போது, முகத்தை மூடிக்கொண்டே வந்தார் என்று பத்திரிகையாளர்கள் கண்டுபிடித்துவிட்டார்கள். அவரிடம் பத்திரிகையாளர்கள் ஏன் முகத்தை மூடிக்கொண்டு வந்தீர்கள் என்று கேட்டால், அவர் உடனே முகத்தை மூடியது தப்பா, முகம் வியர்த்தது என்று சொன்னார். அப்படி முகம் வியர்க்கும் வரை என்ன நடந்தது உள்ளே? அவருக்கும் முகம் வியர்க்கவில்லை, அவரின் கண்கள் வியர்த்து இருக்கின்றன என்று நான் சொல்கிறேன். தப்பு செய்கிறவர்கள் தான் முகத்தை மூடிக்கொண்டு திருட்டுத்தனமாக வருவார்கள். அப்படிப்பட்ட எதிர்கட்சித் தலைவரை தமிழ்நாடு பெற்றுள்ளது.

எடப்பாடி பழனிசாமி அவர்கள், மூன்று மாதங்களுக்கு முன்பு பேருந்தை எடுத்துக்கொண்டு மக்களை சந்திக்க கிளம்பினார். பாதி பிரச்சாரத்தை முடித்துவிட்டார். பிரச்சாரத்தைத் தொடங்கும்போது இருந்த கூட்டத்தில் பாதி பேர் தான் இப்போது இருக்கிறார்கள். பிரச்சாரத்தை முடிக்கும்போது அவரும், டிரைவரும்தான் வருவார்கள் என்று நம்புகிறேன்.

எப்படியாவது தமிழ்நாட்டுக்குள் நுழைய வேண்டும் என்று பா.ஜ.க, அ.தி.மு.க-வின் துணையோடு வந்து கொண்டு இருக்கிறது. பழைய அடிமை பழனிசாமி பற்ற வில்லை என்று இன்றைக்கு புதிய அடிமைகளையும் பா.ஜ.க. வலைவீசி தேடிக்கொண்டு இருக்கிறது. நான் யாரைச் சொல்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியும். அடிமைகள் சிக்குவார்கள், ஆனால், எத்தனை அடிமைகள் வந்தாலும் கருப்பு-சிவப்பு கரை வேட்டி கட்டியிருக்கின்ற தி.மு.க.காரன் இருக்கிறவரைக்கும் நீங்கள் தமிழ்நாட்டுக்குள் கால் வைக்க முடியாது.

பா.ஜ.க-வின் சதிகளை எல்லாம் முறியடிக்கப்போவது திராவிட முன்னேற்றக் கழகத்தின் உடன்பிறப்புகள் நீங்கள் தான். அனைவரும் தேர்தல் பிரச்சார வேலைகளை ஆரம்பித்துவிட்டார்கள். நாம் எல்லோருக்கும் முன்பே ஆரம்பித்துவிட்டோம்.

நாம், நம் தேர்தல் பிரச்சாரத்தை ஆரம்பித்துவிட்டோம். பா.ஜ.க. அவர்களின் பிரச்சாரத்தை ஆரம்பித்துவிட்டார்கள். முக்கியமாக, இரண்டு நாட்களுக்கு முன்பு அவரின் தேர்தல் பிரச்சாரத்தை ஆரம்பித்துள்ளார். அவர் வேறு யாரும் இல்லை, நம் ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி அவர்கள்தான்.

நாம் தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் என்று சொன்னால், நீங்கள் யாருடன் போராடப்போகிறீர்கள், யாரை வெல்லப்போகிறீர்கள் என்று அவர் கேட்கிறார். தமிழ்நாடு யாருடன் போராடும் என்று கேட்டிருக்கிறார். தமிழ்நாடு 4 வருடமாக உங்களுடன்தான் போராடிக் கொண்டு இருக்கிறது. நிச்சயம், தமிழ்நாடு உங்களுடன் போராடி, வென்று காட்டும்.

**மக்கள் மனதில் நம்பிக்கை**

எடப்பாடி பழனிசாமி அவர்கள், புதிதாக ஒரு விஷயத்தைச் சொல்லி இருக்கிறார். அ.தி.மு.க-தான் இன்றைக்கு மக்கள் மனதில் முதல் இடத்தில் இருக்கிறது என்று கண்டு பிடித்து இருக்கிறார். இரண்டாவது இடத்தில்தான் மற்ற கட்சிகள் எது இருக்கிறது என்று தெரியாமல் போட்டிபோட்டுக்கொண்டு இருக்கிறார்கள் என்று பேசியிருக்கிறார். உண்மையைச் சொல்ல வேண்டும் என்றால் அ.தி.மு.க-வின் உள்ளேதான் இரண்டாவது இடத்துக்கு போட்டிகள் நடந்துகொண்டு இருக்கின்றன. ஏனென்றால், முதலிடத்தில் அமித்ஷாவும், மோடியும் இருக்கிறார்கள். இரண்டாவது இடத்திற்குதான் எடப்பாடி பழனிசாமியா, ஓ.பி.எஸ்ஸா, சசிகலாவா, செங்கோட்டையனா என்று அவர்களுக்குள்தான் போட்டி நடந்துகொண்டு இருக்கிறது.

மக்களைக் காப்போம், தமிழகத்தை மீட்போம் என்று எடப்பாடி பழனிசாமி அவர்கள் சொல்லிக்கொண்டு இருக்கிறார். முதலில் அவர் பா.ஜ.க-விடம் இருந்து அ.தி.மு.க-வை மீட்க வேண்டும். அந்தப் பணியில் அவர் இறங்க வேண்டும். இப்படிப்பட்ட அ.தி.மு.க-வும், பா.ஜ.க-வும் ஆட்சிக்கு வந்தால், தமிழ்நாட்டை என்ன நிலைமைக்குக் கொண்டு விடுவார்கள் என்று நம் அனைவருக்கும் தெரியும். நான்கரை வருடத்தில் மாநில உரிமைகளை மீட்டுள்ளோம். ஆகவே, இதையெல்லாம் தடுக்கவேண்டிய பொறுப்பு யாருக்கு இருக்கிறதோ இல்லையோ நம் கழக உடன்பிறப்புகள் உங்கள் அத்தனை பேருக்கும் இருக்கிறது என்பதை நீங்கள் அனைவரும் உணர வேண்டும்.

2026 சட்டமன்றத் தேர்தலில் இந்த அடிமைகளையும், பாசிஸ்ட்டுகளையும் மறுபடியும் ஓட ஓட விரட்டி அடிக்க வேண்டும். மாவட்ட, ஒன்றிய, பேரூர், நகர, பகுதி, வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள் அத்தனைபேரும் அடுத்த 5 மாத காலம் மக்களோடு மக்களாக நெருங்கிப் பழக வேண்டும், அவர்களின் குறைகளைக் கேட்க வேண்டும். நம்மால் செய்ய முடிந்ததை உடனே செய்து கொடுக்க வேண்டும். மற்றவர்கள் மாதிரி நாம் ஆட்டு மந்தைகள் கிடையாது. நாம் கொள்கைக் கூட்டம் என்பதை நீங்கள் உணர வேண்டும். எந்த நிகழ்ச்சியை நடத்தினாலும் திட்டமிட்டு நடத்த வேண்டும். ஒரு நிகழ்ச்சிக்கு எவ்வளவு கூட்டம் வரும், எவ்வளவு எழுச்சியோடு வருவார்கள் என்பதையெல்லாம், வரும் காலத்தில் சரியான திட்டமிடலோடு நிகழ்ச்சியை நடத்த வேண்டும். சரியான செயல்பாடு இருக்கிறதா, சரியான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதா என்பதை நாம் முன்கூட்டியே உறுதி செய்ய வேண்டும். நம் கழகத்தின் வரலாற்றை இன்று இருக்கின்ற இளைஞர்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும்.

மூன்று வருடங்களுக்கு முன்பு, நான் ஒரு விஷயத்தை ஒரு கூட்டத்தில் பேசினேன். `பிறப்பால் எல்லோரும் சமம், பிறப்பால் எந்த ஏற்றத்தாழ்வும் சமுதாயத்தில் இருக்கக் கூடாது' என்று பேசினேன். அப்படி ஏதாவது ஒன்று இருந்தது என்றால், நீ உயர்வு, நீ தாழ்வு என்று பேசினார்கள் என்றால், அதை ஒழிக்க வேண்டும் என்று பேசினேன். உடனே சங்கிகள் எல்லாம் பொய்ப் பிரச்சாரத்தைப் பரப்பினார்கள். பல சாமியார்கள் எனக்கு மிரட்டல் விட்டார்கள். ஒரு சாமியார் என் தலைக்கு ஒரு லட்சம் என விலை வைத்தார். இன்னொரு சாமியார், 10 லட்சம் என்று விலை வைத்தார். இன்னொரு சாமியார் உதயநிதி தலையை வெட்டிக் கொண்டு வந்தால், ஒரு கோடி ரூபாய் தருகிறேன் என்று சொன்னார். என்னை மன்னிப்பு கேட்கச் சொல்லி மிரட்டினார்கள். நான் சொன்னேன், ``நான் கலைஞர் பேரன்; நான் சொன்னால் சொன்னதுதான். பிறப்பால் அனைவரும் சமம்தான். யாரிடமும் மன்னிப்பு எல்லாம் கேட்க மாட்டேன், நீங்கள் நீதிமன்றத்துக்கு வாருங்கள்" என்று சொன்னேன். இப்போது அந்த வழக்கு நடந்துகொண்டு இருக்கிறது. அன்று எனக்கு எதிராகப் பொங்கியவர்கள், இன்றைக்கு அதேபோல் ஒரு கருத்தை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சொன்னபோது, உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியையே தாக்கியுள்ளார்கள்.

ஒன்றிய பாசிச ஆட்சியில் இன்றைக்கு இதுதான் நிலைமை. உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி, நேற்று தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கிறார். ஆகவே, தமிழ்நாட்டை மட்டுமல்ல இன்றைக்கு ஒட்டுமொத்த இந்தியாவையே காப்பாற்ற வேண்டிய பொறுப்பு திராவிட முன்னேற்றக் கழகத்தின் உடன்பிறப்புகளுக்கு இருக்கிறது.

கழகத் தலைவர் அவர்கள் இங்கே இருக்கின்ற பூத் கமிட்டி நிர்வாகிகள் மீது மிகவும் நம்பிக்கை வைத்திருக்கிறார். 200 தொகுதியை உறுதியாக நாம் செல்வோம் என்று நம்புகிறார் என்றால், பூத் கமிட்டி நிர்வாகிகள் உங்கள் மீது இருக்கின்ற அந்த நம்பிக்கைதான் காரணம். உடல்நிலை சரியில்லை என்று ஒரு மருத்துவமனைக்குச் சென்றீர்கள் என்றால், அங்கு பல கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஸ்கேனிங் இயந்திரம் இருக்கும், நவீன கருவிகள், ஆபரேஷன் தியேட்டர் இருக்கும். ஆனால், முதலில் மருத்துவர்கள் எந்தக் கருவியைப் பயன்படுத்துவார்கள் என்றால், அவர்கள் கழுத்தில் மாட்டி இருக்கின்ற ஸ்டெதஸ்கோப்பை வைத்துத்தான் முதலில் என்ன பிரச்சனை என்பதைக் கண்டுபிடிப்பார்கள். அதே மாதிரிதான் கழக நிர்வாகிகள், பூத் நிர்வாகிகள் தான் கழகத்தின் ஸ்டெதஸ்கோப். மக்கள் மனதில் நம்பிக்கை ஏற்படுத்த முடியும் என்றால் அதுவும் பூத் கமிட்டி நிர்வாகிகள் உங்களால் மட்டும்தான் முடியும். உங்கள் பூத்தில் இருக்கின்ற ஒவ்வொரு குடும்பத்துடன் நீங்கள் அறிமுகமாகி இருக்க வேண்டும். அவர்களுடன் தொடர்பில் இருக்க வேண்டும். அவர்களுக்கு என்னென்ன தேவையோ அதை எல்லாம் தெரிந்துகொண்டு, அந்த உதவிகளை நீங்கள் செய்து தர வேண்டும்.

**மீண்டும் கழக ஆட்சி**

தலைவர் அவர்கள், சென்னையில், `உடன்பிறப்பே வா' என்ற முன்னெடுப்பின் மூலமாக சட்டமன்றத்தில் இருக்கின்ற மிகமிக முக்கியமான நிர்வாகிகளை வரவழைத்து, சென்னையிலேயே ஆலோசனைக் கூட்டத்தை நடத்தினார். கடந்த வாரம், இந்த திருவரங்கம் தொகுதிக்கு அந்த ஆலோசனைக் கூட்டம் நடந்தது.

தலைவர் அவர்கள் எனக்கு கட்டளையிட்டது... ``நீ தமிழ்நாடு முழுவதும் சென்று, அத்தனை நிர்வாகிகளையும் சந்தித்து, அவர்களின் கருத்துகளைப் பெற்று, ஆலோசனை செய்துவிட்டு வா" என்று அனுப்பி வைத்தார்கள். கிட்டத்தட்ட 6 தொகுதிகள் முடித்துள்ளேன். இன்று திருவரங்கம் தொகுதி ஆரம்பித்து, மாலை திண்டுக்கல்லுக்குச் சென்று, நாளை காலை திண்டுக்கல்லில் ஒரு திருமணத்தை நடத்தி வைத்துவிட்டு, நாளை மாலை துறையூர் தொகுதிக்கு வர இருக்கிறேன்.

நான் பார்த்த இந்த 6 தொகுதிகளில், மக்களின் வரவேற்பு, எழுச்சி, கழக நிர்வாகிகளின் உணர்வுகளை எல்லாம் பார்க்கும்போது, நிச்சயம் சொல்கிறேன்... மீண்டும் நம் கழகம் ஆட்சி அமைக்கப்போவது உறுதி. எத்தனை சூழ்ச்சிகள் வந்தாலும், 2026 தேர்தலில் மீண்டும்உதயசூரியன் உதிப்பதை யாராலும் தடுக்க முடியாது.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் உரை யாற்றினார்.

## கழக நிர்வாகிகள் கேட்ட கேள்விகளுக்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பதில்கள்!

**கேள்வி – பதில்கள்**

**சுப்பிரமணி, மணிகண்டம் ஒன்றியம்.**

**கேள்வி:** `உங்களுடன் ஸ்டாலின்' முகாமில் பெறப்பட்ட மனுக்கள் அனைத்துக்கும் முடிந்தவரை தீர்வு காண்பதன் மூலம் நமது வெற்றியை உறுதி செய்ய முடியுமா?

**துணை முதலமைச்சர்:** நம் சுப்ரமணியன் சொன்னது 100 சதவிகிதம் உண்மை. மக்களுக்கு அரசின் அனைத்து திட்டங்களும் சென்று சேர வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்டதுதான் `உங்களுடன் ஸ்டாலின்' முகாம். இன்றைக்கு கிட்டத்தட்ட 10,000 முகாம்கள் நடத்த வேண்டும் என்ற இலக்குடன் ஆரம்பிக்கப்பட்டு, 8,000 முகாம்கள் வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ளன. என்னுடைய தொகுதியில் மட்டுமல்ல, சென்னையில் இருக்கின்ற பல்வேறு தொகுதிகளில், அந்த முகாம்கள் நடக்கும் பொழுது நானே நேரில் சென்று, ஆய்வுசெய்து இருக்கிறேன். நம் முதலமைச்சர் அவர்களும் ஆய்வுசெய்து இருக்கிறார்கள். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் அவர்களின் தொகுதியில் அந்த முகாம் நடக்கும்போது, நேரில் சென்று, மக்களோடு பயணித்து முகாம்களை நடத்தி இருக்கிறார்கள். இந்த முகாம்களுக்கு மிகப்பெரிய வரவேற்பு கிடைத்திருக்கிறது. இந்த முகாமில் கொடுக்கப்படுகின்ற கோரிக்கைகள் முடிந்த அளவுக்கு தீர்வு காண அரசு தரப்பில், முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். இதுவரைக்கும் 8,200 முகாம்கள் முடிந்திருக்கின்றன. 18 லட்சம் மனுக்களில், 12 லட்சம் மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே இதுவரை எந்த மாநில அரசும் செய்யாத ஒரு சாதனை. மேலும், நம் தலைவர் அவர்கள் அனைத்து அரசு அதிகாரிகளையும் தீர்வுகாண முடியாத மனுக்களுக்கு உரிய விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் அறிவுரை கொடுத்து இருக்கிறார்.

**எஸ்.சிவசுப்பிரமணியன், திருவரங்கம் பகுதி, 1–வது வார்டு.**

**கேள்வி:** பள்ளி மாணவர்களுக்கு இலவசமாக மடிக்கணினி வழங்கும் திட்டத்தை விரைவில் வழங்க வேண்டும் என்று தலைவருக்கு ஒரு ஆலோசனை கூறி இருக்கிறார்.

**துணை முதலமைச்சர் :** நம் அரசு ஆட்சிக்கு வந்த பிறகு, தமிழ்நாட்டை கல்வியில் எப்படி எல்லாம் உயர்த்த முடியுமோ, குழந்தைகளை எப்படி எல்லாம் பள்ளிக்கூடத் திற்கு வரவழைக்க முடியுமோ, பள்ளிக்கூடம் படிக்கின்ற குழந்தைகள் எப்படி எல்லாம் உயர் கல்விக்கு அனுப்ப முடியுமோ, அவர்களுக்கு எப்படி எல்லாம் வேலை வாய்ப்பு பெற்று தர முடியுமோ, அதையெல்லாம் முடிந்த அளவிற்கு செய்துகொண்டு இருக்கிறோம். புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டமெல்லாம் மாணவர்களின் கல்விக்காக உதவுகின்ற திட்டங்கள்.

அதேபோல்தான் முதலமைச்சரின் இலவச மடிக்கணினி வழங்கும் திட்டத்தை தலைவர் அவர்கள் அறிவித்தார். அதற்கு இந்த நிதியாண்டில் 2,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மடிக்கணினி வழங்குவதற்கான அடுத்தகட்ட பணிகள், நடைபெற்று வருகின்றன. இன்னும் இரண்டு மாதங்களில் நிச்சயம் மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டத்தை, நம் தலைவர் அவர்களே துவங்கி வைப்பார்.

**சார்லஸ், மணிகண்டன் ஒன்றியம்**

**கேள்வி:** முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மாதம் ஒரு முறையாவது கழகத் தொண்டர்களுக்குக் கடிதம் மூலமாக, தொடர்பில் இருப்பார். கழகத்தினருக்கு உற்சாகத்தை ஊட்டுவார். அதேபோல் நீங்களும் பணியாற்றுவீர்களா?.

**துணை முதலமைச்சர் :** உங்களின் கருத்து சிறப்பானது. ஆனால் கலைஞர் அவர்களுக்கு நிகர் கலைஞர் அவர்கள் மட்டும்தான். அவரைப் போல இன்னொரு தலைவர் கிடையவே கிடையாது. கண்டிப்பாக இந்த முன்னெடுப்புகளை எல்லாம், நம் தலைவரின் கட்டளையை ஏற்று, என்னால் முடிந்த வரை நிச்சயமாக செய்வேன் என்பதை இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**சுந்தர்ராஜ், மணிகண்டம் ஒன்றியம்**

**கேள்வி:** தலைவர் அவர்கள் ஒன்றிய அரசை எதிர்த்து, அவர்களுக்கு அடிபணியாமல் ஆட்சி செய்வது பற்றி....

**துணை முதலமைச்சர் :** நம் தலைவர் அவர்கள் தமிழ்நாட்டின் எந்த உரிமையையும் இழக்கக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறார். தொகுதி மறுவரையறையை ஒன்றிய அரசு கொண்டு வரும்போது, இந்தியாவிலேயே முதன் முறையாக நம் முதலமைச்சர் அவர்கள்தான் இப்படி ஒரு பிரச்சினை வரப்போகிறது. ஒன்றிய அரசு இதை திட்டமிட்டுள்ளார்கள் என்று ஆரம்பித்தார். அதன்பிறகுதான் மற்ற முதலமைச்சர்கள் எல்லாம் இவர் சொல்வது சரி என்று சொன்னார்கள். மற்ற முதலமைச்சர்கள் எல்லாம் தமிழ்நாட்டு முதலமைச்சர் என்ன சொல்கிறார், தமிழ்நாடு அரசு என்ன முடிவு எடுக்கிறது என்று பார்க்கிறார்கள். நீட் தேர்வு, வரி பகிர்வில் பாரபட்சம், சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தம், கல்விக்கான நிதி ஒதுக்குவது, ஒரே நாடு ஒரே தேர்தல், ஒன்றிய அரசு பட்ஜெட்டில் தமிழ்நாடு அரசுக்கு பாரபட்சம், இந்தித் திணிப்பு, தொகுதி மறுவரையறை இப்படி தமிழ்நாட்டு மக்களுக்கு எதிரான அனைத்து திட்டங்களையும் ஒன்றிய அரசு கொண்டு வரும்போது, நம் முதலமைச்சர் அவர்கள்தான் அதற்கு முதல் ஆளாக எதிர்த்து குரல் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்.

**ஜெயச்சந்திரன், மணிகண்டம் ஒன்றியம்**

**கேள்வி:** இளைஞர்களுக்கு கழகத்தில் கூடுதல் வாய்ப்புகள் வழங்க வேண்டும் ?

**துணை முதலமைச்சர் :** ஜெயச்சந்திரன் அவர்களுக்கு நன்றி. வட்டம், கிளை, பாகம் வாரியாக இன்றைக்கு இளைஞர் அணிக்கு அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களை நாங்கள் ஒவ்வொரு மாவட்டம் வாரியாக, மாவட்ட, ஒன்றிய, வட்டக் கழகச் செயலாளர்களின் பரிந்துரைப் பட்டியலை எடுத்துக்கொண்டு, நேர்காணல் நடத்தி, முரசொலியில் தினந்தோறும் அறிவிப்புகள் வந்துகொண்டு இருக்கின்றன. நிர்வாகிகள் தங்கள் குடும்பத்தில் உள்ளவர்களை கழகத்தில் முழுமையாக செயல்பட வைத்தாலே நமக்கு இணையான இளைஞர் ஆதரவு இருக்கின்ற கட்சி, இந்தியாவிலேயே இருக்காது. நம் வீட்டில் இருந்து இளைஞர்களை ஈடுபட வைக்க வேண்டும். நீங்கள் அனைவரும் உங்கள் பகுதியில் உள்ள இளைஞர்களிடம் சென்று கழக அரசின் சாதனைகளை அவர்களுக்கு ஞாபகப்படுத்த வேண்டும். பல இளைஞர்கள் நம் கழகத்தில் சேர்வதற்கு நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும். இளைஞர்களை மூத்த முன்னோடிகளாகிய நீங்கள் வழிநடத்த வேண்டும். அவர்களுக்கு இயக்கத்தின் கொள்கைகள், வரலாற்றைச் சொல்லித் தர வேண்டும்.

**கனகராஜ், மணிகண்டம் ஒன்றியம்**

**கேள்வி:** காலனி என்றச் சொல் இன்றும் பயன்பாட்டில் உள்ளது. அதை நீக்க உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் ?

**துணை முதலமைச்சர் :** `காலனி' என்ற பெயரை மாற்ற, நம் தலைவர் அவர்கள்தான அரசாணை வெளியிட்டார்கள். எப்படி கலைஞரின் ஆட்சியில் சமத்துவப்புரத்தைக் கட்டி, அனைவரும் சமம் என்பதை உருவாக்கினாரோ, அதேபோல் இன்றைக்கு கலைஞர் வழியில் நம் தலைவர் அவர்கள் காலனி என்ற வார்த்தையை ஒழிப்பதற்கான அரசாணையை வெளியிட்டு இருக்கிறார்கள். விரைவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மருதகுமார், அந்தநல்லூர் ஒன்றியம்**

**கேள்வி:** கிளைச் செயலாளர்களை நீங்கள் அதிகம் ஊக்குவிக்க வேண்டும்.

**துணை முதலமைச்சர் :** நம் கழகத்தைச் சேர்ந்த எந்தவொரு நிர்வாகியும், கழகப் பணிகளில் சோர்வடைந்ததில்லை. சோர்வடைந்தால்தான் நான் சென்று ஊக்குவிப்பதற்கான வேலை வரும். நம் கழக நிர்வாகிகள் போன்று இந்தியாவில் எந்தவொரு கட்சியிலும் சிறப்பாக செயல்படக்கூடியவர்கள் கிடையாது. தற்போது வட்ட, கிளைக் கழகச் செயலாளர்களுடன் புகைப்படம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான், நானே உங்களைத்தேடி இங்க வந்துள்ளேன். தலைவர் அவர்களுக்கு வட்ட, கிளைச் செயலாளர்கள் மீது தனிப்பாசம் உண்டு. ஏனென்றால், நீங்கள்தான் கழகத்தின் ஆணிவேர். நீங்கள் இல்லை என்றால் இந்த இயக்கம் கிடையாது.

**மனோகர், மணிகண்டம் ஒன்றியம்.**

**கேள்வி:** கிளைக் கழகச் செயலாளர்களை 6 மாதத்துக்கு ஒரு முறையாவது நீங்கள் சந்திக்க வேண்டும்.

**துணை முதலமைச்சர் :** டாக்டர் கலைஞர், நம் தலைவர் அவர்களைப்போல தொடர்ந்து நானும் கிளை, வட்டக் கழகச் செயலாளர்களை சந்தித்து வருகிறேன். நீங்கள் எப்போது சென்னைக்கு வந்தாலும், நான் உங்களை சந்திப்பேன். இளைஞர் அணியின் தலைமை அலுவலகம், அன்பகத்தின் கதவுகள் திறந்தே இருக்கும். அடுத்த 5 மாதங்கள் பூத் கமிட்டி நிர்வாகிகளிலிருந்து, மாவட்டக் கழக நிர்வாகிகள் வரை அனைவரும் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணித்துளியும் மிகமிக முக்கியம் என்பதை நீங்கள் உணர வேண்டும். நம் கழக ஆட்சி மீண்டும் அமைய வேண்டும் என்றால், நம் தலைவர் அவர்கள் தொடர்ந்து இரண்டாவது முறையாக முதலமைச்சர் நாற்காலியில் அமர வேண்டுமென்றால், நீங்கள் அத்தனைபேரும் இதே உணர்வோடும், எழுச்சியோடும் மக்களை சந்தித்து பிரச்சாரத்தை மேற்கொள்ள வேண்டும்.

தலைவர் அவர்கள் நாம் 200 தொகுதி வெற்றிபெற வேண்டும் என்று இலக்கு கொடுத்திருக்கிறார். நாம் அனைவரும் அடுத்த 5 மாதம் இந்தத் தேர்தல் பணியில் ஈடுபட்டோம் என்றால், 200 இல்லை 200-க்கும் அதிகமான தொகுதிகளில் நம் திராவிட முன்னேற்றக் கழக அணி நிச்சயம் வென்று காட்டும்.

இலக்கு 200 க்கு முதல் தொகுதியாக இந்த திருவரங்கம் தொகுதி நிச்சயமாக அமையும். அதை நீங்கள் செய்துகாட்ட வேண்டும். திருவரங்கம் மட்டுமல்ல, மத்திய மாவட்டத்துக்கு உட்பட்ட மூன்று தொகுதியிலும் சென்ற முறை வாங்கிய வாக்கு வித்தியாசத்தைவிட, இந்த முறை அதிகமான வாக்கு வித்தியாசத்தை நீங்கள் வாங்கி கொடுக்க வேண்டும். தலைவர் அவர்கள் உங்கள் மீது நம்பிக்கை வைத்துள்ளார். அந்த நம்பிக்கையை நீங்கள் நிறைவேற்றிக் காட்டுங்கள்.

இந்த சிறப்பான நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த முதன்மைச் செயலாளர் அண்ணன் நேரு அவர்களுக்கும், மாவட்டக் கழகச் செயலாளர்களுக்கும், வந்திருக்கின்ற அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அனைத்து நிர்வாகிகளுக்கும், கலைஞரின் உடன்பிறப்புகள் அத்தனைபேருக்கும் நன்றி.

**தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும்!**